**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109475

1. District மாவட்டம் : திருவாரூர் PS: காவல்நிலையம் V&AC TVR Year ஆண்டு 2024 FIR No முதஅ எண் 2 Date நாள் 20/6/202[4]

2. (i) Act சட்டம்: Provention of Corruption Act 1988 as amended 2018 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as amended 2018
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 8.03.2024/12.00 DM offi[ce]
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 25.04.2024/09.00 } Throu[gh] Cell Ph[one]
17.06.2024/08.00
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் 18.06.2024/02.00 A 2 Hou[se]
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் வாதியின் புகார் Time : நேரம் 20.06.2024 - 06.00
FIR 20.06.2024 - 07.00

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 500 Meter வ.கி
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி TASMAC மாவட்ட மேலாளர் அலுவலகம் திருவாரூர்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.மா. சிவநாம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o மாணிக்கம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 46/2024 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் TASMAC விற்பனையாளர் க.எண் 9267 (g) Address : முகவரி D.No 01/101 சிக்ரந்தை குடியிருப்பு, திருத்துறைப்பூண்டி (தாலுகா) திருவாரூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு. ரசந்தி பிரேம் சிந்தர் TASMAC மாவட்ட மேலாளர் திருவாரூர் (DT)
2) திரு. சரவணன் TASMAC விற்பனையாளர், திருவாரூர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவு போனது / சம்பந்தப்பட்டுள்ள சொத்துக்களின் விபரம் (தேவைப்படின் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved
களவு போனது / சம்பந்தப்பட்டுள்ள சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவைப்படின் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது:

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, துணை காவல் கண்காணிப்பாளர் திருமதி.B.பூரணி ஆகிய நான் 20.06.2024-ந் தேதி காலை 6.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.மா.சிவதாஸ் என்பவர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் : மா.சிவதாஸ் (46), த/பெ. மாணிக்கம், க.எண். 1/101, சத்திரத் தெரு, குன்னலூர், திருத்துறைப்பூண்டி (தாலுக்கா), திருவாரூர் மாவட்டம், பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, நான் எனது குடும்பத்துடன் குன்னலூர் சத்திரத்தெருவில் வசித்து வருகிறேன். நான் M.A., B,Ed வரை படித்துள்ளேன். நான் கடந்த 19.01.2003 அன்று திருத்துறைப்பூண்டி தாலுக்கா பாண்டி அரசு டாஸ்மாக் மதுபானகடையில் விற்பனையாளராக பணிக்கு சேர்ந்தேன். தற்போது 09.02.2024 முதல் மன்னார்குடி

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed .................. Rank .................. to take up the Investigation / Refused investigation / transferred to PS .................. on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................. பதவி .................. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
முதல் அ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

[signature] 20/6/24

B. Poorani
20/06/24

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name பெயர் B. POORANI
Rank நிலை DSP, No எண்
V&AC, TVR.

**(குற்ற எண். 01/2024 FIR-ன் தொடர்ச்சி...)**

தாலுக்கா, ஆலங்கோட்டை மதுபானகடையில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது வயிற்றில் கட்டி இருப்பதால் என்னால் தினமும் சுமார் 110 கிலோமீட்டர் பயணம் செய்து பணிக்கு சென்று வர கடினமாக இருந்தது. அதனால் மன்னார்குடி ஆலங்கோட்டை கடையிலிருந்து எனது வீட்டிற்கு அருகாமையில் உள்ள திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் உள்ள ஏதேனும் ஒருகடைக்கு பணிமாறுதல் வேண்டி 08.03.2024-ந் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் திருவாரூர் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் திரு.சக்தி பிரேம் சந்தர் அவர்களை திருவாரூர் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் உள்ள அவரது அறையில் சென்று பார்த்தேன். அப்போது மாவட்ட மேலாளருக்கு உதவியாக இருக்கும் விற்பனையாளர் திரு.சரவணனும் DM அருகில் நின்று கொண்டிருந்தார். மாவட்ட மேலாளர் என்னிடம் பணிமாறுதல் வழங்க வேண்டும் என்றால் ரூ.1,10,000/- லஞ்சமாக பணம் கேட்டார். லஞ்சபணத்தை கொண்டுவந்து விற்பனையாளர் திரு.சரவணனிடம் கொடுத்துவிடுங்கள் என்று DM சார் கூறினார். நான் சரி என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். எனது உடல்நலம் கருதியும், குடும்ப சூழ்நிலை காரணமாகவும் பணிமாறுதலுக்காக வேறு வழியின்றி இரண்டு, மூன்று தடவையாக சரவணனிடம் ரூ.70,000/- கொடுத்துவிட்டேன். மீதிபணத்தை என்னால் தயார் செய்ய இயலவில்லை, 25.04.2024 தேதி காலை சுமார் 09.00 மணியளவில் விற்பனையாளர் சரவணன் அவரது 9443899433 செல் நம்பரிலிருந்து எனது 6381178549 செல் நம்பருக்கு பேசி மீதி லஞ்சபணம் ரூ 40,000/- ம் எப்போது எடுத்து வருகிறாய் என்று கேட்டார். அதற்கு நான் பணம் தயார் செய்ய இயலவில்லை, நான் மாவட்ட மேலாளர் சக்தி சாரை பார்க்கிறேன் என்று கூறினேன். ஆனால் சரவணன் நீ மேலாளரை பார்த்தாலும் வேலை எதுவும் நடக்காது அவர் நேரடியாக லஞ்ச பணம் எதுவும் பெறமாட்டார். நான்தான் பணத்தை பெற்று DM கேட்கும் போது கொடுப்பேன், நீ மீதி பணம் ரூ.40,000/-த்தை தயார் செய்து எடுத்து வா நான் டிரான்ஸ்பர் வாங்கி தருகிறேன் என்று கூறி போனை வைத்துவிட்டார். பின்னர் 17.06.2024-ந் தேதி காலை சுமார் 8.00 மணிக்கு சரவணன் அவரது 8220874360 செல் நம்பரில் இருந்து எனது 6381178549 செல் நம்பருக்கு பேசி மீதி லஞ்சபணம் என்ன ஆச்சி, டிரான்ஸ்பர் வேணுமா இல்ல வேண்டாமா என்று DM சார் கேட்கிறார் என்று என்னிடம் போனில் தகவல் கேட்டார்.

(குற்ற எண். 01/2024 FIR-ன் தொடர்ச்சி...)

கேட்ட இடத்தில பணம் வரல பணம் வந்தவுடன் நாளை உங்களையும், DM சாரையும் வந்து பார்க்கிறேன் என்று கூறி போனை வைத்துவிட்டேன். பின்னர் 18.06.2024-ந் தேதி மதியம் சுமார் 2.00 மணியளவில் சரவணனை பார்பதற்காக மேலாளர் அலுவகத்திற்கு சென்றேன். சரவணன் வீட்டிற்கு சென்று விட்டதால், சரவணனை அவரது வீட்டில் சென்று சந்தித்தபோது, ரூ.40,000/- தயார் செய்வது ரொம்ப கஷ்டமா இருக்கு சரவணா, DM சார் கிட்ட சொல்லி கொஞ்சம் கொறச்சி பேசு, நானும் சாரை நேரில் வந்து பார்க்கிறேன், ஏற்கனவே கொடுத்த ரூ 70,000/- த்தை DM சார்கிட்ட கொடுத்தாச்சா என்று கேட்டேன். அதற்கு சரவணன் அந்த பணத்தை DM சார் கேட்டு வாங்கிட்டாரு , பணம் குறைத்து கொடுத்தால் DM சார் ஒத்துக்கமாட்டாரு, நீ ஏற்கனவே பணம் கொடுக்க ரொம்ப லேட் பண்ணிட்ட என்று கோபத்தில் இருக்காரு, நீ மீதி பணத்தை ரெடி பண்ணி எடுத்துகிட்டு வா நான் DM கிட்ட பணத்தை கொடுத்துட்டு டிரான்ஸ்பர் வாங்கி தருகிறேன் என்று கூறியதால் நான் திரும்ப வந்து விட்டேன். எனக்கு வயிற்றில் கட்டி இருப்பதாலும், அதிக தூரம் அலையமுடியாத காரணத்தாலும் DM யை பார்த்து பணிமாறுதல் கேட்டேன். பணிமாறுதலுக்காக என்னிடம் ரூ.70,000/- லஞ்சமாக பெற்ற பிறகும், மீதி லஞ்ச பணம் ரூ.40,000/- கேட்டு பலமுறை என்னை அலையவிட்டதனால் நான் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளானேன். DM சக்தி பிரேம் சந்தரும், அவருக்கு உதவியாக இருந்துவரும் விற்பனையாளர் திரு.சரவணனும் என்னிடம் பணிமாறுதலுக்காக மீதிபணம் ரூ.40,000/- லஞ்சமாக கேட்டதை கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே மேற்படி இரண்டு நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு புகாரினை தயார் செய்து கொண்டு, லஞ்சமாக கேட்ட ரூ.40,000/- பணத்துடன் 20.06.2024-ந் தேதி காலை 06.00 மணிக்கு திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து புகார் அளிக்கிறேன். திருவாரூர் மாவட்ட மேலாளர் திரு.சக்தி பிரேம் சந்தர் மற்றும் மாவட்ட மேலாளருக்கு உதவியாக இருக்கும் விற்பனையாளர் திரு.சரவணன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள Sd (xxxxxxxxxxx) மா.சிவதாஸ் (20.06.24) அய்யா, மேற்படி புகாரின் பேரில் உத்தரவுபடி எதிரிகள் மீது முன்விசாரணை செய்து இப்புகார்மனு மீது திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும்

(குற்ற எண். 01/2024 FIR-ன் தொடர்ச்சி...)

கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 01/2024 ச/பி 7 of Prevention of Corruption Act 1988 as amended 2018-ன் படி 20.06.2024-ந் தேதி காலை 07.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. Sd (XXXXXX) 20.06.2024 B.பூரணி, Deputy Superintendent of Police, V&AC, Thiruvarur.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

B. Poorani
20/06/24

துணை காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருவாரூர்.